மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அறிக்கை முறையாகத்தான் வந்திருக்கிறது. இந்த அவைக்கு உறுதி கொடுத்தது உண்மை, அதைத் தெளிவுபடுத்தியிருக்கிறேன். இந்த அவைக்குத் தெரியாமல் மாற்றம் செய்ய விரும்பவில்லை. ஆகவே, காரண காரிய விளக்கங்களைச் சொல்லியிருக்கிறேன். அதற்கு விதிமுறைகள் வரப்போகின்றன. இரண்டையும் சேர்த்து வைத்து விவாதிக்க இடம் அளிக்க ஆயத்தமாக இருக்கிறது அரசு. அவை முடிவு எடுத்து அனுமதியளிக்க வேண்டும் என்பதைப் பேரவைத் தலைவரவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொன்னது இந்தச் சட்டசபையிலே ஒரு முக்கியமான பிரச்னைதான். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடன்கூட விவாதித்திருக்கிறேன். ஒரு உறுப்பினர் ஒரு திருத்தம் கொடுக்கிறார், இன்னொரு உறுப்பினரும் அதேமாதிரியாக திருத்தம் கொண்டுவரும் நேரத்தில், சிலநேரங்களில் இரண்டும் ஒரேமாதிரியாக இருக்கின்றபொழுது ஒரு உறுப்பினரை மட்டும் முன்மொழியுமாறு சொல்கிறோம். ஆகவே, இன்னொருவருக்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அந்த உறுப்பினர் மனத்தை மாற்றிக்கொண்டு வற்புறுத்தாமல் விட்டுவிட்டால் அந்தக் கருத்தே கூட இடம் பெறுமல் போகிறது. இவைகளை நம்முடைய சட்ட மன்ற விதிமுறைகள் கமிட்டி ஆராயலாம். இந்த விவாதத்தைப் பொறுத்துக்கூட அல்ல, இரண்டு உறுப்பினர்களும் அமெண்ட் மெண்ட் கொடுக்கும் நேரத்தில் சபையில், முதலிலே கொடுத்த உறுப்பினருக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அதற்கு மாற்று யோசனைகளை ரூல்ஸ் கமிட்டி ஆராய உறுப்பினர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6. கவன ஈர்ப்பு

தில்லி அகில இந்திய வானொலியில் தமிழ்ச் செய்தி அறிக்கைக்கு அளிக்கப்பட்ட நேரம் குறைக்கப்பட்டதும், அதை மீண்டும் அதிகரிப்பதன் அவசியம் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு திரு. மலைச்சாமி அவர்கள் கொண்டு வருவார்கள்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, "பல்லாண்டு காலமாக டில்லி, அகில இந்திய வானொலி நிலையத்தில் நாள் ஒன்றுக்கு (காலை, பிற்பகல், இரவு, ஆகிய நேரங்களில்) தமிழ்ச் செய்தி அறிக்கை நாற்பது நிமிடங்கள் படிக்கப்பெற்று வந்ததை அண்மைக் காலத்திலிருந்து முப்பது நிமிடங்களாகக் குறைக்கப் பெற்றுள்ளதால் தமிழக மக்களும், வேற்று நாடுகளில் வாழும் தமிழர்களும் இந்தியச் செய்திகளை முழுமையாகக் கேட்க வாய்ப் பில்லாத நிலையை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி பழைய

[திரு. பெ. மலைச்சாமி]

நேரங்களை மீண்டும் பயன்படுத்த வேண்டும்" என்ற அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு-வாருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, "பல்லாண்டு காலமாக தில்லி அகில இந்திய வானொலி நிலையத்தில் நாள் ஒன்றுக்கு (காலை, பிற்பகல், இரவு ஆகிய நேரங்களில்) தமிழ்ச் செய்தி அறிக்கை நாற்பது நிமிடங்கள் படிக்கப்பெற்று வந்ததை அண்மைக் காலத்திலிருந்து முப்பது நிமிடங்களாகக் குறைக்கப்பெற்றுள்ளதால் தமிழக மக்களும், வேற்று நாடுகளில் வாழும் தமிழர்களும் இந்தியச் செய்திகளை முழுமையாகக் கேட்க வாய்ப்பில்லாத நிலையை மத்திய அரசுக்கு எடுத்துக்கூறி பழைய நேரங்களை மீண்டும் பயன்படுத்தவேண்டும் என்ற அவசரமும். பொது முக்கியமான காரியம் பற்றி" என்பது திரு. மலைச்சாமி அவர்களின் அறிவிப்பாகும்.

முன்னர் தில்லியில் இருந்து அஞ்சல் செய்யப்படும் தமிழ்ச் செய்தி அறிக்கை காலை 7-15 முதல் 7-30 வரையிலும், பிற்பகல், 2-00 முதல் 2-10 வரையிலும், இரவு 7-15 முதல் 7-30 வரையிலும் ஒலி பரப்பு செய்யப்பட்டு வந்தது. இப்போது இந்த நேரத்தை காலை 7-15 முதல் 7-25 வரையிலும், பிற்பகல் 12-40 முதல் 12-50 வரையிலும், இரவு 7-15 முதல் 7-25 வரையிலும் என மாற்றி இருக்கிறார்கள். இதில் காலை இரவு ஆகிய நேரங்களிலும் 5 நிமிடங்கள் விதம் 10 நிமிடங்கள் குறைத்திருக்கிறார்கள். பிற்பகல் ஒலிபரப்பில் நேரம் குறைக்கப்படவில்லை. ஆனால் 2-00 முதல் 2-10 வரை என இருந்ததை 12-40 முதல் 12-50 வரை என மாற்றி இருக்கிறார்கள்.

முன்னர் தமிழ் செய்தி அறிக்கை ஒலிபரப்பான நேரம் நாள் ஒன்றுக்கு காலையில் 15 நிமிடங்கள், பிற்பகலில் 10 நிமிடங்கள், இரவில் 15 நிமிடங்கள் ஆக மொத்தம் 40 நிமிடங்களாகும்.

தற்போது ஒலிபரப்பு செய்யும் மொத்த நேரம், காலையில் 10 நிமிடங்கள், பிற்பகலில் 10 நிமிடங்கள், இரவில் 10 நிமிடங்கள் ஆக மொத்தம் 30 நிமிடங்களாகும்.

ஆக 10 நிமிடங்கள் நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாற்றம் 1971 ஆகஸ்டு முதல் செயல்பட்டு வருகிறது.

இந்த மாற்றத்தால் தமிழக மக்களும், வேற்று நாடுகளில் வாழும் தமிழர்களும் இந்தியச் செய்திகளை முழுமையாகக் கேட்க வாய்ப்பில்லாத நிலையை மத்திய அரசுக்கு எடுத்துக்கூறி பழைய நேரங்களை மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்பதே திரு. பி. மலைச்சாமி, எம்.எல்.ஏ., அவர்களின் அறிவிப்பு.

தற்போது, அதாவது 1—8—1971 முதல் வானொலியில் நிகழ்ச்சிகளுக்கிடையே 2 நிமிட நேரம் ஆங்கிலத்திலும், இந்தியிலும் நாட்டில் அவ்வப்போது நடைபெறும் மிக முக்கிய நிகழ்ச்சிகளைப்

[திரு. ப. உ. சண்முகம்]

பற்றி காலதாமதமின்றி ஒலிபரப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த நேரத்தை சரிக்கட்டவே காலை மாலை ஐந்து நிமிடங்கள் விதம் மொத்தம் 10 நிமிடங்கள் தமிழ்ச் செய்திகள் ஒலிபரப்பப் படும் நேரத்தில் குறைத்திருக்கிறார்கள். பிற எல்லா மொழி ஒலிபரப்பிலும் நாடு முழுவதும் இதே போன்ற மாற்றம் செய்யப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் இந்த அறிவிப்பை வைக் கிறேன்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, தற்போது இந்திய நாட்டிற்கு பாகிஸ்தானால் கொடுமையான ஒரு செயல் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் வெளிநாட்டிலுள்ள தமிழக மக்கள் இந்தியச் செய்தியை முழுமையாகக் கேட்டால்தான் இந்தியா விற்கு ஆதரவாக வெளிநாடுகளின் ஆதரவைத் திரட்ட முடியும். எனவே மீண்டும் பழைய நேரங்களில் ஒலிபரப்புவதற்கு ஏற்ற வகையில் மத்திய சர்க்காரை வற்புறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இப் பொழுது ஒலிபரப்பப்படும் நேரங்களில் 10 நிமிடங்கள் குறைந் திருந்தாலும் சொல்ல வேண்டிய செய்திகளை முழுதும் சொல்லி விடுகிறார்கள். இடையிடையே முக்கிய செய்திகளை நாட்டு மக்களுக்கு ஆங்கிலத்திலும், இந்தியிலும் சொல்கிறார்கள். இதனால் எந்தச் செய்தியும் குறைக்கப்படவில்லை. இப்பொழுது அவசர நிலை இருப்பதால் இது சம்பந்தமாக மத்திய அரசுக்கு எழுத வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஒரு அறிவிப்பு.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவை (Senate) 6—12—1971 முதல் திருத்தி அமைக்கப்பட வேண்டியிருப்பதால், அப்பேரவைக்குத் தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத் தின் சட்டப்படி, ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடை பெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 8—12—1971 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செய லாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்